**சுருக்கம்**

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா – காஞ்சிபுரம் மாவட்டம் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் – அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் காஞ்சிபுரம் நகரில் பல்வேறு துறைகளால் மேற்கொள்ளப்பட வேண்டிய சிறப்புப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு – நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பளிப்பு ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை

**அரசு ஆணை (நிலை) எண். 233** **நாள் : 05.12.2009**

**<u>படிக்கப்பட்டது:</u>**

மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலரிடமிருந்து பெறப்பட்ட **06.11.09** மற்றும் **10.11.09** நாளிட்ட குறிப்பு

----

**ஆணை:**

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவினையொட்டி செப்டம்பர் **25** மற்றும் **26, 2009**–ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காஞ்சிபுரத்தில் சில வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார்கள்.

**2)** மேற்குறிப்பிட்ட அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில் மேற்கோள்ளப்பட வேண்டிய பணிகள், நிதி ஒதுக்கீடு மற்றும் அவற்றிற்காக தேவைப்படும் நிதி ஆதாரம் குறித்த ஆய்வுக் கூட்டம், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் சமர்ப்பித்த கருத்துருவின் அடிப்படையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் **06.11.2009** அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் திட்டங்களுக்கான நிதி ஆதாரம், நிதி ஒதுக்கீடு மற்றும் செயல்படுத்தப்பட வேண்டிய துறைகள் ஆகிவைகள் குறித்து முடிவெடுக்கப்பட்டது. அவற்றின் விவரம் கீழ்க்கண்டவாறு உள்ளன.

| Sl. No. | Name of the Scheme | Project Cost (Rs. In Lakhs) | Implementing Department | Funding |
|---|---|---|---|---|
| **1** | Beautification of | **45.00** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | Sarvaatheertha Kulam Temple Tank by providing Solar CFL Decorative Lighting arrangements, Greenery and Plantation with Walking pathway and sitting arrangements. | | Hindu Religious and Charitable endowment Department | Special Grant by the Government |
| 2 | Beautification of Rangasamy kulam Temple Tank by providing Solar CFL Decorative Lighting arrangements, greenery and Plantation with Walking pathway and sitting arrangements | 23.00 | | |
| 3 | Providing Cement Concrete pavement at Thiruvengumban Street | 21.00 | Kancheepuram Municipality | |
| 4 | Providing Cement Concrete pavement at Sangusapet Street | 20.00 | | |
| 5 | Providing modernized dust bins at various places in Kancheepuram Municipal limits | 20.00 | | |
| 6 | Improvements to Pallavan Nagar Park | 25.00 | Sevilimedu Town Panchayat | |
| 7 | Providing Cement Concrete road for Kannikapuram | 4.00 | | |
| 8 | Providing Cement Concrete pavement for Kamarajar Street | 5.00 | | |
| 9 | Providing High mast light at Sevilimedu Town Panchayat at two places | 8.00 | | |
| 10 | Construction of storm water drain at Tiruparthikulam Salai | 60.00 | | |
| 11 | Providing new Park at Katchabeeswarar Nagar T.S.No.1274/1&2, Ward No.3 Block No.18 | 250.00 | MA&WS | |
| 12 | Beautification of Okkapiranthan Kulam | 52.00 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | Temple Tank by Providing Solar CFL. Decorative Lighting arrangements, Greenery and Plantation with walking pathway and sitting arrangements. | | PWD (WRO) | Special Grant by the Government |
| 13 | Construction of Flood Protection wall in manjalneer Channel at Okkapiranthan Kulam in Kancheepuram | 193.00 | | |
| 14 | Construction of retaining wall in Vegavathy river at upstream of cause way near Collectorate for a total length of 200 M in Kancheepuram – Vandavasi Road of Kancheepuram Taluk | 69.00 | | |
| 15 | Construction of Swimming pool with Infrastructure facility and improvements to District Sports Stadium, Kancheepuram | 130.00 | Public Works Department (Building Construction &maintenance) | |
| 16 | Construction of storm water drain and widening of railway road | 420.00 | High Ways | |
| 17 | Improvements to SCKAT Road (Sangeetha Hotel Junction to Olimugamadupettai Junction) | 370.00 | | |
| | **Total** | 1715.00 | | |

3) மேற்கண்ட சூழ்நிலையில், இப்பொருள் குறித்து அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில், மேலே பத்தி 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளும் ரூ.1715.00 இலட்சம் (ரூபாய் ஆயிரத்து எழுநூற்று பதினைந்து இலட்சம் மட்டும்) செலவில் மேற்கொள்ள ஒட்டுமொத்த நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது. இப் பணிகளுக்கான விரிவான மதிப்பீடுகளை (Detailed Estimate) அந்தந்த துறைத் தலைவர்களிடமிருந்து பெற்று சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் ஆய்வு செய்து, நிதித் துறையின் இசைவுடன் குறிப்பான நிர்வாக ஒப்புதலினை பெற்று ஆணை வெளியிட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

4) மேற்குறிப்பிட்ட பணிகளை உடனடியாக துவக்கி அனைத்து பணிகளையும் ஏப்ரல் 2010–க்குள் முடிவடையுமாறு திட்டங்களை செயல்படுத்த சம்பந்தப்பட்ட அனைத்து துறை செயலர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மேலும், திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்த கால முறை அறிக்கையினை சம்பந்தப்பட்ட துறைச் செயலர்கள் ந.நி.(ம)கு.வ.துறை செயலருக்கு இரு வாரங்களுக்கு ஒரு முறை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் 14.11.2009 நாளிட்ட அ.சா.கு. எண். 3252/ FS/ P/2009–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**/ ஆளுநரின் ஆணைப்படி /**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசுச் செயலாளர்.**

**பெறுநர்**

முதன்மைச் செயலர், பொதுப்பணித்துறை, சென்னை–9.
செயலர், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
செயலர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108.
மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம்.
உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை இயக்குநர், சென்னை–108.
தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டிடம்), சென்னை
தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை–34
செங்கல்பட்டு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்.
நகராட்சி ஆணையர், காஞ்சிபுரம்.
செயல் அலுவலர், செவிலிமேடு பேரூராட்சி, காஞ்சிபுரம்

**நகல்**

நிதித்துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலர், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ந.நி.(ம)கு.வ.துறை செயலரின் தனிச் செயலர், சென்னை–9.
ந.நி(ம)கு.வ. (அந2) துறை. சென்னை–9.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**